சார்பு நீதிமன்றம், பெருந்துறை

**MCOP** 29/2013

2026-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 05 ம் நாள் Pw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் : 05.02.2026

Pw1 (சுப்புலட்சுமி)

**குறுக்கு விசாரணை ( 3 ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

விபத்து என் தகப்பனார் சாலையை கடக்கும்போது ஏற்பட்டது என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்திற்கு லாரி ஓட்டுநர் தான் காரணம் என அவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 1 ம் எதிர்மனுதாரர் குற்றத்தை ஒப்புக் கொண்டு நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். என் தகப்பனார் விபத்தில் ஏற்பட்ட காயங்களினால் தான் இறந்தார் என்பதற்கு மருத்துவ சான்று தாக்கல் செய்யவில்லை என்றால சரியல்ல. விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் என் தகப்பனார் இறந்ததாக சென்னிமலை காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தோமா என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. மருத்துவ சான்று எதுவும் இல்லை என்பதால் தான் காவல் நிலையத்திற்கு தகவல் எதுவும் கொடுக்கவில்லை என்றால சரியல்ல. என் தகப்பனாரின்இறப்பு சான்றில் (மசாஆ 2)அவரின் வயது 74 என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி. என் தகப்பனார் வயோதிகத்தின் காரணமாக வீட்டில் தான் இருந்தார் என்றும், அவருக்கு வருமானம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. என் தாயார் 1 ம் மனுதாரர் இறந்து விட்டார். எங்கள் அனைவருக்கும் திருமணம் ஆகி நாங்கள் குடும்பத்துடன் குடியுள்ளோம் என்றால சரி. நாங்கள் யாரும் எங்கள் தகப்பனாரின் வருமானததை நம்பியிருக்கவில்லை என்றால சரியல்ல. என் தகப்பனாருக்கு பிரேத பரிசோதரைண செய்யவில்லை என்றால் சரிதான். என் தகப்பனார் விபத்தில் ஏற்பட்ட காயத்தினால் இறக்கவில்லை என்றும், அவர் வயோதிகத்தின் காரணமாக தான்இறந்தார் என்றும், என் தகப்பனாரின் இறப்பிற்கும் விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. என் தகப்பனாரின் இறப்பு மற்றும் சிகிச்சை குறித்து மருத்துவர் தான் சொல்ல முடியும் என்றும் நான் சொல்ல முடியாது என்றால் சரியல்ல. நான் மருத்துவரை விசாரிக்கப்போகிறேனா என்றால் தெரியாது. எங்கள் மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. 3 ம் மனுதாரர் தான் விபத்து குறித்து புகார் கொடுத்தார் என்றால் சரிதான்.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED
Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2026.02.05 13:30:03 -1000

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS